483

Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol IV] OCTOBER 1922 [No. 10

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

3C
LL,9C ௱ 211, N14
M22·4·10
186458

...n Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருடசந்தா தபாற்கூலி யுட்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 1 8 0
	பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	ரூ 2 0 0
தனி சஞ்சிகை ..	... விலை	ரூ. 0 2 6

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்தமாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச்சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னடி செலுத்தியாவது அல்லது வி.பி. யில் கட்டியாவது பத்திரிகையை பெற்றுக்கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக்கொள்வதால் அணா மூன்று அதிகமாய் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய் கவனிக்கவேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடுசெய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு	...	ரூபா.	10—0—0
அரைப் பக்கத்திற்கு	,,	...	,,	6—0—0
கால் பக்கத்திற்கு	,,	...	,,	3—0—0

விலாசம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4	1922ஸ்ரீ அக்டோபர்மீ	பகுதி 10

சென்னை-600 003
186458

(6) பரசுராமாவதாரம்

சந்திரகுலத்தில் பிறந்த காதிமகாராஜனுக்குச் சத்தியவதி யென்றொரு பெண்ணிருந்தாள். அவளை ரிஸீகர் என்னுந் தவமுனியொருவர் விவாகம் செய்து கொள்ள விரும்பினார். ஆனால் அவர் மிக்க கோரரூபத்தோடு இருந்ததைக்கண்டு காதிமன்னன் தமது புத்திரிக்குத் தகுந்த நாயகன் அவர் அல்லவென்று தீர்மானித்து ரிஸீகரைப்பார்த்து "ஐயா, தாங்கள் ஒருகாது மாத்திரம் கருப்பாயும் மற்ற அங்கங்கள் முழுவதும் வெள்ளையாயும்

உள்ள குதிரைகள் ஆயிரங்கொண்டுவந்தால் என் பெண் ணைக் கல்யாணம் செய்துகொள்ளலாம்" என்று போக்குச் சொல்லி அனுப்பிவிட்டார். ரிஸீகர் இந்த நிபந்தனையைக் கேட்டதும் உடனே வருணனிடம் சென்று அரசன் சொல்லிய அடையாளப்படி ஆயிரங் குதிரைகளைப் பெற்று வந்து கொடுத்துச் சத்தியவதியை விவாஹம்செய்து கொண்டார்.

இப்படியிருக்கையில் ஒருநாள் சத்தியவதியும் அவள் தாயாரும் ரிஸீகரையடைந்து அவர் மகாதபசி யாகையால் அவரிடம் புத்திரசந்தானத்தை யாசித்தனர். அவரும் ஒப்புக்கொண்டு இரண்டு கலசத்தில் *அவிசு இட்டு அவைகளை மந்திரித்து வைத்துவிட்டு ஸ்நானம் செய்ய வெளியேசென்றார். காதிராஜன் மனைவி தன் மகள் சத்தியவதியிடமிருந்து அவள் நாயகர் இருவருக்கும் அவிசு மந்திரித்து வைத்திருக்கிறார் என்று கேள்விப்பட் டாள். ரிஸீகர் ஒருவேளை அவர்பத்தினிக்கு என்று தயா ரித்துவைத்த அவிசில் ஏதேனும் விசேஷத்தை அமைத் திருக்கக் கூடுமென்று அவளுக்குப்பட்டது. இந்த எண் ணம் உண்டானவுடனே அவள்தன் மகளுக்குரிய பாகத் தை எடுத்துச் சாப்பிட்டுவிட்டாள். ரிஸீகர் திரும்பிவந்து நடந்ததையறிந்து "ஐயோ நான் பிராமணனாகையால் என் மனைவிக்குப் பிராமணப்பிள்ளையும் என்மாமியாருக்கு க்ஷத்திரியப்பிள்ளையும் உண்டாகும்படி செய்துவைத்தி ருந்தேனே. அதை இப்படி மாற்றிக்கொண்டார்களே" என்று விசனித்தார். அப்பொழுது சத்தியவதி மிகவும் வருந்தித் தன் நாயகரைப் பலவாறுவேண்டித் தனக்குப்

*அவிசு=ஒருவகைபானம்.

பிறக்கும் பிள்ளை பிராமணத்தன்மையோடும் பிறக்க அருள்புரியுமாறு தெரிவித்தாள். அவரும் ஒருவாறு சாந்தமடைந்து "போகட்டும், உனக்கு இப்பொழுது பிறக்கும் பிள்ளை பிராமணனாக விருப்பான். ஆனால் உன்பேரன் க்ஷத்திரியனாகத்தான் இருப்பான்" என்று அவிசின் தன்மையை மாற்றினார்.

பின்பு சத்தியவதிக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அதற்கு ஜமதக்கினி என்று பெயரிட்டனர். ஜமதக்கினி சகலசாஸ்திரபண்டிதராய் மகாதபசியாய் விளங்கினார். அவர் ரேணுகாதேவியென்றொருமாதை மணஞ் செய்துகொண்டு ஓர் ஆசிரமத்தில் இருந்து வந்தார். இப்படியிருக்கையில், அம்முனிவர்,

*" கருது சீர்புனை சிலமக வுயிர்த்துமால் கலையாம்
பரசுராமனைப் பார்பொறை நீங்குறப் பயந்தார் ".

இப்பரசுராமர் சிறு பிராயத்திலேயே பிராமண தர்மத்தை அநுசரிப்பதை விட்டு க்ஷத்திரியர்களுக்கு வேண்டிய வில்வித்தை முதலிய போர்ப்பழக்கங்களில் ஈடுபட்டு அவற்றை நன்றாகக் கற்றுத்தேறினார்.

இவ்வாறிருக்குங் காலையில் கார்த்தவீரியார்ச்சுனன் என்பவன் ஒருவன் மகாபலசாலியாய் அசுரர் அரசர் முதலிய எவரையும் ஜயித்து தனக்குமேல் ஒருவருமில்லை என்று கர்வித்திருந்தான். இவன் ஒருநாள் வேட்டையாடக் காட்டுக்குப்போனான். போனவன் தற்செயலாய் இந்த ஜமதக்கினி முனிவருடைய ஆசிரமத்தை அண்டினான். அப்பொழுது முனிவர் அவனுக்கும் அவன்

* மகவு-பிள்ளைகள் ; உயிர்த்து-பெற்று ; மால்-விஷ்ணு பொறை-பாரம்; பயந்தார்-பெற்றார்.

பரிவாரங்கட்கும் மிகவுந்திருப்தியாக அன்னமளித்து உபசரித்தார். அவனது எண்ணில்லாத பரிவாரங்களுக்கும் அவனுக்கும் அன்னபானாதிகளைத் தருவதற்கு முனிவர் தெய்வப்பசுவாகிய காமதேனுவை வரவழைத்திருந்தார். அந்தப்பசுவானது எதைக்கேட்டாலும் கொடுக்க வரம் பெற்றது. அதைக் கார்த்தவீரியார்ச்சுனன் அறிந்து அப்பசுவைத் திருடிக்கொண்டு போய்விட்டான். இந்த விஷயம் பரசுராமருக்குத் தெரிந்ததும் மிகுந்த கோபத்துடன் தமது பரசு ஆயுதத்தை எடுத்துக்கொண்டு கார்த்தவீரியன் பட்டணத்துள் சென்று அவன் சைனியத்தையும் அவனையுங்கொன்று காமதேனுவை மீட்டு வந்தார். இதுகாரணத்தால்தான் பரசுராமருக்கு முதன் முதல் க்ஷத்திரியரிடம் வெறுப்புண்டாயிற்று. இதையறிந்த ஜமதக்கினி முனிவர் பரசுராமரை அழைத்து, "அப்பா,

"சொல்லும் அந்தணர் துன்பு செய்துளார்க்
கல்லல் செய்திடார் அருளின்வைகுவார்
வில்லொ டம்பையும் மேவி வேந்தையுங்
கொல்லும் வெஞ்சினங்கொண்ட தென்கோலோ"

ஆதலால், அப்பாவம் நீங்கப் புண்ணிய தீர்த்தமாடி வரக்கடவாய்" என்றனர்.

பரசுராமரும் அங்ஙனமே தீர்த்த யாத்திரை செய்து வந்தார்.

ஒருநாள் ரேணுகாதேவி தன் நாயகருக்காக நீர் திரட்டக் கங்கைக்குப் போயிருந்தாள். அங்கே சித்திரரதன் என்னும் கந்தருவன் அப்சரஸ்திரீகளோடு விளையாடிக்கொண்டிருப்பதைக்கண்டு அவள் மனம் வேறுபட்டது. வேறுபடவே அவள் தான் கொண்ட காரியத்தை

மறந்து விட்டுச் சிறிது நேரங்கழித்து ஆசிரமந் திரும்பினுள். பூஜைவேளை தவறி விட்டதால் முனிவர் அதன் காரணத்தைத் தமது ஞான சக்தியால் தெரிந்து மிகவுங் கோபங்கொண்டு தன் மக்களைப்பார்த்து "இவளைக்கொன்று விடுங்கள்" என்று கட்டளையிட்டார். முதல் மூன்று பிள்ளைகளும் தகப்பன் உத்தரவின்படி நடக்கப் பின் வாங்கினுர்கள். அதனுலவர் கோபங்கொண்டு கடைசிமைந்தரான பரசுராமரை யழைத்து, "உன் சகோதரரும், உன் தாயும் பிழைபுரிந்தனர்; அவர்களை என் எதிரிலேயே நீ கொல்வாயாக" என்றனர். உடனே அவர் தமது தாயையும் பிராதாக்களையும் கொஞ்சமுங் கூசாமல் கொன்று விட்டார். "ஈன்ருளின் என்ன கடவுளுமில்" என்பதையு மறந்து தந்தை சொல்லையே தலைமையாகக்கொண்டு தாயைக்கொன்றது இவருக்குப் புகழாகவே முடிந்தது. இன்றும் இவரை,

"............அறத்தினை நோக்கி யீன்ற
தாய்வினை செய்யவன்ருே கொன்றனன் பரசுராமன்"

என்று பெரியார் புகழ்கின்றனர். ஆயினும், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" யென்று பிதிர்வாக்கிய பரிபாலனஞ்செய்த மகனைப்பார்த்து அவர் தந்தை மகா சந்தோஷத்துடன் "உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேட்டுக்கொள், தருகிறேன்" என்ருர். பரசுராமர், "தந்தாய்! நான் கொன்றவர்கள் எல்லோரும் பிழைக்கவும் நான் அவர்களைக்கொன்றேன் என்ற விஷயம் மறந்துபோகவும் வரந்தரவேண்டும்" என்ருர்.

"மைந்தனங் குரைத்தவண்ணம்
மாதவன் அருள; மாய்ந்தோர்
உய்ந்தன ரெழுந்தார் உற்ற உறக்க நீத்
தெழுந்தாரே போல்

தந்தையுந் தாயுஞ் சாற்றுந்
தம்முனென் றுரைத்துளோரும்
அந்தமில் உவகை பூப்ப
அமர்ந்தனன் * கணிச்சியாளன் ''—

இப்படியிருக்கையில் கார்த்தவீரியார்ச்சுனன் பிள்ளைகள் தமது தந்தை இறந்ததற்காக மிகவும் வருந்திப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று சமயம் பார்த்திருந்தார்கள். ஒருநாள் அவர்கள் பரசுராமர் இல்லாத சமயம் பார்த்து அவருடைய ஆசிரமத்துள் புகுந்து நிஷ்டையில் இருந்த அவர் பிதாவாகிய ஜமதக்கினி முனிவரை வெட்டியெறிந்து ஓடிப்போனார்கள். இதை அறிந்த பரசுராமர்மகா கோபங்கொண்டவராய் க்ஷத்திரியர் எல்லோரையும் நாசம் செய்து விடுவதாய்ச் சபதமிட்டுக் கார்த்தவீரியார்ச்சுனன் பிள்ளைகள் இருக்குமிடத்தைத் தேடிப்போய் அவர்களைக் கொன்றார். அதற்கப்புறம் இருபத்தொரு முறை இந்தப் பாதகண்டத்தை வலம் வந்து க்ஷத்திரியர்களைக் கொன்று நாசமாக்கினார். குருக்ஷேத்திரத்திற்கருகில் ஐந்து ரத்த மடுக்கள் ஏற்படுத்தி அவைகளில் தமது தந்தைக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து முடித்தார். இப்போது இவரிடமிருந்த விஷ்ணுகலை நீங்க, இவர் சாதாரண பரசுராமராக விளங்கினார். இந்தப்பரசுராமர் ஸ்ரீராமபிரானால் கர்வபங்கப்பட்டுத் தமது வலிமை முதலிய சகலத்தையும் இழந்து மஹேந்திரமலையை யடையலானார். இவர் சிரஞ்சீவி. இவர் தந்தை இவருடைய விசேஷ கர்மங்களால் சப்தரிஷிகளுள் ஒருவரானார்.

---

* கணிச்சி-மழு (பரசுராமன்).

தாயிற்சிறந்தொரு கோயிலுமில்லை

ஒருநாள் காலையில் இராமநாதன் தன் தாயாரைப் பார்த்து, "அம்மா! நான் சங்கரன்கோயில் போய்வருகிறேன். அங்குத் திருவிழா நாளைக்கு. விடைதாரும் அம்மா" என்று கேட்டான். தாயார், அப்பனே, நீ மாத்திரம் தனியே போகின்றாயா என்ன? 'துணையோடல்லது நெடுவழி போகேல்' என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்களே; இது உனக்குத் தெரியாதா?" என்று கேட்டாள். இராமநாதன், "அம்மா, திருவிழாவுக்கு எத்தனையோபேர் வழியில் போய்க்கொண்டிருப்பார்கள். பயமென்ன வழியில்" என்றான். தாயார், "இராமநாதா! அப்படியல்ல; நான் சொல்வதைக்கேள். துணையில்லாமல் போவது கூடாது. இந்தா, இதனையாவது கொண்டுபோ" என்று கூறி, கழனியிலிருந்து ஒரு நண்டைப் பிடித்து அதனை ஒரு கலயத்தில்போட்டுக் கொண்டுவந்து பிள்ளையிடங் கொடுத்து 'அப்பா! இந்த நண்டைத் துணையாகக் கொண்டுபோ" என்று கூறினாள்.

இராமநாதன், நகைத்து, போங்களம்மா! நண்டைத் துணைகொண்டுபோவதாவது; நானென்ன பைத்தியமா?" என்று கேட்டுத் தயங்கிநின்றான். தாயார், "குழந்தாய்! 'மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்' என்று கூறுவதை நீ கேட்டதில்லையா? ஆதலால் என் வார்த்தையை மறுக்காமல் இதை எடுத்துக்கொண்டுபோ; இதுவும் உனக்கொரு துணையாயிருக்கும்" என்று கூறினாள்.

இராமநாதன், நல்ல புத்திசாலியாதலால், "அம்மாள் சொல்லும் பேச்சைத் தட்டுவதுகூடாது. தாய் தந்தையர்கள் எப்போதும் குழந்தைகளுக்கு நல்லதே சொல்லுவார்கள்" என்றெண்ணித் தாயைப் பணிந்து, அப்படியே கொண்டுபோகிறேன்; விடைதாரும்" என்று கூறி விடைபெற்று நண்டைத் துணைகொண்டு சங்கரன் கோயிலுக்கு நடந்தான்.

இராமநாதன் பாதிவழிபோகையில் வெயிலின் கடுமையினால் களைப்புற்று ஒரு மரத்தின் நிழலிலேபோய்க் கைக் கலயத்தை வைத்துவிட்டுப் படுத்துச் சற்று நேரத்திற்கெல்லாம் நித்திரைபோய்விட்டான்.

அவன் நித்திரைபோனபிறகு எங்கிருந்தோ ஒரு பாம்பு அவனைக் கடிப்பதற்காக வந்து அவனருகில் கலயமிருக்கக்கண்டு அதில் என்ன இருக்கிறது என்றறிய அதனுள் தலையைவிட்டது. நண்டு பாம்பு தலைவிடுவதைக்கண்டு உடனே தன் கொடுக்கால் இறுக்கி அதனைக் கொன்றது.

இப்படிப் பாம்பு இறந்த கொஞ்சநேரத்திற்கெல்லாம் இராமநாதன் விழித்துக்கொண்டு தன்னருகே பாம்பு இறந்து கிடைப்பதைக்கண்டு, "இது எப்படி யிறந்தது" என்றெண்ணியபடி பார்க்கையில், நண்டு அதன் கழுத்தை இறுக்கிக் கொன்றதைக்கண்டு "ஓ கோ! இந்த நண்டல்லவா நம்முயிரை இப்படிப்பட்ட அரிய செய்கை செய்து காப்பாற்றியிருக்கிறது? ஆகா! அம்மாள் சொன்ன பேச்சைத்தட்டி இதைக் கொண்டுவராமலிருந்தால் நமது கதி யாதாயிருக்குமிந்நேரம்? தாயிற்சிறந்தோரு கோயிலுமில்லை என்கிறார்களே அது உண்மைதான். அவர்

களுக்குப் பின்னேவருவது நன்ருய்த் தெரியும்போலும்" என்றெண்ணி அங்கிருந்தபடியே தாய்க்கு நமஸ்காரஞ் செய்து எழுந்து நண்டுடன் திருவிழாவுக்குப் போய்ப் பார்த்துவிட்டு ஊருக்கு வந்து சேர்ந்தான்; தன் தாயைப் பணிந்து வழியில் நடந்ததைச் சொல்லி வியப்படைந் தான். இச்சரித்திரம் கேட்டவர்களெல்லாரும் தாயாரின் பெருமையை உணர்ந்து இனித் தாய்சொல்லைத் தட்டு வது கூடாதென்றுணர்ந்தார்கள்.

கோபம்.

கோபம் என்பது மனிதர்களிடங் காணும் கெட்ட குணங் களுள் ஒன்று. இது பெரும்பாலும் மனேதிடமற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடியுண்டாகும். அற்பவிஷயங் காரண மாகவும் அவர்கள் கோபங்கொள்வார்கள். இதை ஆலோசித்துப் பார்த்தால், கோபத்தை அடக்கச் சக்தியில்லாமையினலேயே அவர்கள் கோபிக்கிருர்களென்பது தெரியும். கோபம் உண் டாமாயின் அதனைச் சற்று நிதானத்தால் அடக்கிவிடுவாகுைில் அவன் பிறகு பெரியவனுவான். அவன் உள்ளம் மகிழும். அவனுக்குப் பெருமையு முண்டாகும்."

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ!"

"கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தால் நகுடனும் கோலமாறினன்
கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே."

அகங்காரம்.

(271-ம் பக்கத்தொடர்ச்சி)

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா நினைத்த மாத்திரத்தில் பிரமதேவரது மானச புத்திராகிய நாரதபகவான் வந்து சேர்ந்தார். வரும்போது தமது வீணாகானத்தை மீட்டிப் பின்வரும் பாடலைப் பாடிக்கொண்டும், ஆநந்தக் கூத்தாடிக்கொண்டும் வந்தார்.

பல்லவி

பக்தியருளிமுகம் பார்க்கலாகாதா ராமா
பரமசத்தியநாமா—ஹரி-ஹரி (ப)

அநுபல்லவி

சக்தியில் லாச்சின்னஞ் சிறுவர்கள் எம்மனம்
சற்குணவழிதனிற் சார்ந்திட அநுதினம் (ப)

சரணம்

(1) கல்வியிலும்பல கைத்தொழிலிலும் நல்ல
கைதேர்ந்தவருக்குங் கனிவாய்நடக்கவல்ல
செல்வநடையுதவித் தேசம் புகழ்ந்து சொல்ல
தீயகுணங்களெங்கள் சிந்தையைவிட்டுச் செல்ல (ப)

(2) குடும்பமதையெவருங் கொண்டாடத்தாங்கிநன்று
கோபுரத்தின்மேல் வைத்த குலவிளக் கெனநின்று
இடும்பைகளெமையென்றும் எய்தாவகையேவென்று
இராஜகோ பாலநின் இணையடிகளில் ஒன்றும் (ப)

இவ்வாறு நடனமிட்டுக் கொண்டுவந்த நாரதரைப் பகவான் கண்குளிர நோக்கி "முனீந்திரரே! எழுந்தருள வேண்டும்; உமது வரவு நல்வரவாகுக" என்றுகூறினர். நாரதரும் "சுவாமி! தேவரீரது பக்தியிற் கட்டுண்டிருக்கும் அடியேனுக்குத் தேவரீரைச் சேவிப்பதினும் சிறந்த பணி யாதிருக்கின்றது? அடியேனுலாகக் கூடியது ஏதேனும் இருப்பின் பணித்தருளப் பிரார்த்திக்கின்றேன்" என்றார்.

பகவான் "தவநாதா! உம்மால் ஆகாதகாரியம் தெய்வலோகத்தில்தான் என்னவிருக்கின்றது? மும்மூர்த்திகளும் அவர்களுடைய தேவிமார்களுமே உமது தயவை எதிர்பார்ப்பார்களானல் நானெம்மாத்திரம்? அஃதிருக்கட்டும்; இப்போது நடக்கவேண்டிய முக்கியவேலையொன்றுண்டு. இராமபக்தரான ஸ்ரீ ஆஞ்சநேயரை நீர் அறிவீரல்லவா? அவர் சிரஞ்சீவியாதலால் ஸ்ரீ ராமபிரான் தமது திருவடிச் சோதிக்கு எழுந்தருளும்போது அவரைச் சேதுவில் வசித்துவரத் திட்டஞ்செய்து, கிருஷ்ணவதாரத்தில் காட்சியளிப்பதாக வாக்குத்தத்தம் புரிந்தருளினர். அவ்வாறே அவர் சேதுவில் வாசஞ்செய்துவருகிறார். அவரை இராமகானத்தால் பரவசப்படுத்தி அழைத்துக் கொண்டுவந்து, நமது அண்ண பலராமருடைய நந்தவனத்தில் விட்டு நம்மிடம்வாரும். பிறகு ஆகவேண்டியதைக் கவனிப்போம்" என்றார்.

நாரதரும் "தன்யோஸ்மி" என்று புறப்பட்டு, யாழை மீட்டி.

"ராம ராம ராம ஸீதா ராம ராம ராம ஸீதா"

என்று பாடிக்கொண்டே புண்ணியஸ்தலமான சேது வைநோக்கிச் சென்றார்.

சேதுவின் ஒருகட்டத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர்யோக நிஷ்டையிலமர்ந்து இராம நாமமாகிய தாரக மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். நாரதர் அவரைக்கண்டு இவரே புண்ணிய புருஷர்; இவருடைய நாவில் ஸ்ரீராம நாமம் குடிகொண்டிருக்கிறது. இவரை நம்வழிக்குத் திருப்பி இட்டுக்கொண்டுபோவது அசாத்தியம்" என்று நினைத்தார். உடனே நம்மாலானதைப் பார்ப்போமென்று நிச்சயித்து இராமநாமப் பிரபாவத்தைப் பற்பல ராகதாளங்களில் அமைத்து வெகுநேரம் பாடினார். முடிவில்,

பல்லவி

சீதாராமச்சந்த்ர நமாவென் றர்ச்சனை செய்மனமே—நல்ல
திறமறிந்தாலிது அறிவைநம்முள் உயர்த்திடுங்கனமே.

அநுபல்லவி

வேதா அரியரனிம் மாதாரகப்பொருளை
யேதான் அடுத்தனர்கற் சாதாரணத்தினொடு. (சீதா)

சரணம்

பொல்லாப்பிறவிவினை எல்லாம் உள்ளதோங்கே
போகாதே—அது
செல்லாதெந்தநாளிலும் நில்லாதடரும்பயன் ஆகாதே
கல்லானது கௌதமன் இல்லாளெனப்பதத்தில்
செல்லாநின்றதுகள் செய்-வல்லானைய நுதினம் (சீதா)

என்றுபாடினார்.

இப்பாடலைக் கேட்டதும் ஆஞ்சநேயர் எழுந்து நின்று கூத்தாடத் தொடங்கினார். நாரதர் இதுவே நல்ல குறியென்று மெல்லமெல்ல ஸ்ரீ ராமநாம பஜனையைச்

செய்துகொண்டே வந்தவழியை நோக்கித்திரும்பினர். மாருதியும் ஆடிக்கொண்டே அந்தப்பஜனை சென்றவழியே சென்றார். இவ்வண்ணம் அஞ்சனைச் செல்வரை நாரதர் அழைத்துவந்து துவாரகையிலுள்ள பலாமரது உத்யானவனத்தில் விட்டுவிட்டு, கிருஷ்ணபகவானுக்கு இதை அறிவித்து விடைபெற்றுக்கொண்டு தேவலோகம் போயினர்.

ஆஞ்சநேயர் அந்த நந்தவனத்தை யடைந்ததும் அங்கு ஸ்ரீ ராமநாமம் தமது செவியிற் படாமையினால் கண்களைத் திறந்து நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்தார். அந்த இடம் தமக்குப் புதியதாகத் தோன்றியது. அதனால் ஆச்சரிய முற்று “ஆஹா! எவனோ நம்மை ஏமாற்றி இங்கு அழைத்து வந்து விட்டான். அந்த அழுகையும் என் பராக்ரமத்தால் சீக்கிரத்தில் வெளிப்படுத்துகிறேன். உத்யானவனமோ மிகவும் மனோகரமாயிருக்கிறது. நமக்கு வேண்டிய கனிவர்க்கங்களும் விசேஷித்திருக்கின்றன. எந்த ஆண்மகன் தான் நம்மிடம் வருகின்றானோ பார்ப்போம்” என்று தமக்குள் சிந்தித்து, சிறிய குரங்கின் வடிவெடுத்துக்கொண்டு இங்கு மங்கும் உலாவிய வண்ணமாய்க் கனிகளைப்பறித்துச் சுவைத்துக் கொண்டிருந்தார்.

அப்போது தோட்டத்துக் காவலாளர்கள் “என்ன-நமது நந்தவனம், நாம் சுத்திசெய்து போனபடி யிராமல், குப்பையுங் கூளமுமாக இருக்கின்றதே. மரக்கிளைகள் அனேகம் முறிபட்டுக் கீழே வீழ்ந்திருக்கின்றன. நமது எஜமான் திடீரென்று வந்தால் [illegible] கொள்ளுவாரே” என்று நினைத்து [illegible] பரபரப்பாக அங்கு [illegible]

186458

எடுத்து மறுபடியும் சுத்தி செய்யலானார்கள். அவர்களிடம் ஆஞ்சநேயர் ஒரு பிராமண வாலிபனைப்போல் தோன்றி "இது யாருடைய நந்தவனம்?" என்று வினவினார். அதற்கவர்கள் "சுவாமி! இது பலராம சக்ரவர்த்தியின் உத்யானவனம்: தங்களுக்குத் தெரியவராதா? தாம் இந்த ஊரல்லவோ?" என்றனர்.

"அப்படியா? ராமருக்கு மேலே பலராமர் என்றும் ஒருவருண்டா? பேஷ்-வெகு நன்றாயிருக்கிறது. நல்லது நானொன்று உங்களுக்குச் சொல்லுகிறேன்-கேளுங்கள். உலகத்தில் யாவரையும் ரமிக்கச் செய்பவர் ராமரொருவரே; அவரே சீதா ராமர்; கல்யாணராமர்-அவருக்கு எதிராகப் பலராமர் என்னும் பெயரை எவனோ தெரியாமல் வைத்துக்கொண்டான். உடனே அவனைப் "பல" என்னும் அடைமொழியை எடுத்துவிடச் சொல்லுங்கள். இல்லாவிடில் இங்கொரு குரங்குவந்திருக்கிறது. அது ராமர் என்கிற பெயரொன்றுக்குத்தான் மரியாதை பண்ணும். பலராமர் என்பதைக் கேட்டால் அதற்கு அளவுகடந்த கோபம் உண்டாகும். அதன் கோபத்திற்கு உங்கள் பலராமர் ஈடாகமாட்டார். பரசுராமர் என்று ஒருவரிருந்தார். அவர் சீதாராமரினால் சிக்ஷிக்கப்பட்டு ரக்ஷிக்கப்பட்டார். ஆகையால் சீக்கிரம் ஓடிப்போய் உங்கள் எஜமானை "பல" என்னும் பதத்தை எடுத்துவிடச் சொல்லுங்கள் "என்றார்.

காவலாளிகள் "சுவாமி! இந்தச் சங்கதியை நாங்கள் எப்படி அவரிடம் சொல்வோம். சுபாவத்திலேயே அவருக்குக்கோபம் உண்டு. எங்களால் ஆகாது" என்றார்கள்.

"அப்படியானுல் வருவதைப்படுங்கள்" என்றுசொல்லி மறைந்துவிட்டார்.

பிறகு ஆஞ்சநேயர் அந்த அழகிய நந்தவனத்தைச் சின்னுபின்னஞ் செய்யத்தலைப்பட்டார். காவலாளர்மேல் சீறிவிழுந்தார். அவர்கள் பயந் தோடிச்சென்று பலராமரிடம் தெரிவித்தார்கள். பலராமர் அவர்களைப்பார்த்து "என்னடா நீங்கள் இப்படி இரைக்க இரைக்க ஓடிவந்து நந்தவனத்தை ஒரு குரங்கு அழிக்கிறது என்று வாய் கூசாமல் சொல்லுகிறீர்களே. கோலெடுத்தால் குரங்காடும் என்னும் பழமொழியுங்களுக்குத் தெரியாதா! வீரர்களாகிய நீங்களா ஒருசிறு குரங்குக்குப் பயப்படுவது. நீங்கள் சுத்தபேடிகள். போங்கள் அப்பால்" என்று சொல்லித் தமது படைத்தலைவரி லொருவனையழைத்து "நமது தோட்டத்தைக் குரங்கு பாழாக்குகிறதாம். போய்ப் பார்த்து அத்துஷ்ட வானரத்தை அடித்துத் துரத்தி விட்டுவா" என்றனர்.

அந்த வீரன் பலராமரிட்ட கட்டளைப்படி நந்தவனம் வந்து தன்னுலான கோகரண கெஜகர்ணங்களை யெல்லாஞ் செய்து பார்த்தான். ஒன்றுலும் அக்குரங்கரசை யசைக்க முடியவில்லை. கடைசியில் அவமானப்பட்டு உயிர் பிழைத்தாற்போது மென்று, வீரன், பலராமரிடம் ஓடிவந்தான். அவனைக்கண்டதும் பலராமர் "என்னடா சங்கதி—காயா பழமா?" என்ருர். அதற்கவன் "சுவாமி! 'பழமெல்லாங் குரங்கே தின்று வருகிறது. நமக்குள்ளது காய் தான். அது சாதாரண குரங்காகத் தோற்றவில்லை. கோலெடுக்க விட்டாலன்ரூே அதை நாம் பின் ஆட்டலாம். நமது சைனிய முற்றுந் திரண்டுபோனுலும்,

அதற்கொரு சுண்டைக்கா யாகும் என்று வெள்ளிடைமலைபோல விளங்குகின்றது. ஆகையால் நமக்குத்தான் வல்லமையுண்டென்று மனப்பாற் குடித்துப் பிறாது வல்லமையை யறிந்து கொள்ளாமலே அவரிடம் போரிடப் புகுவது சிறுபிள்ளை விளையாட்டாய் முடியும். இந்த சம்பந்தமாக ஒரு சிறுகதை சொல்லுகிறேன் தயவு செய்து கேட்டருளவேண்டும். விராட ராஜனுக்கு உத்தர குமாரன் என்றொரு புத்திரனிருந்தான்.

(இன்னும் வரும்.)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

உலகத்தில் பிறரை ஏமாற்றிப் பொருள்தேடுவதையே தம் வயிற்றுப்பாட்டுக்குரிய தொழிலாகக்கொண்டு திரிகிறவர்களே பெரும்பான்மையர். ஏனெனில் உலகத்தில் புத்திமான்களிலும் புத்தியீனர்களே மிகுதி. ஆகையினால் நாம் உலகத்தில் வெகு ஜாக்கிரதையாய்ப் பழகவேண்டும். நம்மைவிடப் பணத்திலோ அதிகாரத்திலோ பெரியவனொருவன் நம்மைத் தேடி வந்து பார்த்துப் புதுசிநேகம் செய்துகொண்டால், நாம் அவனை எந்தவிதத்திலும் நம்புவதுகூடாது. இவ்வளவு பெரிய மனிதனுடைய சிநேகம் நமக்குக் கிடைத்துவிட்டதே என்று மகிழ்வதி கூடாது. அவன் ஏதேனும் நம்மிடம் ஒரு காரியத்தை உத்தேசித்தே வருவான். இல்லாவிட்டால் நம்மிடம் அவனுக்கு என்னவேலை? நாம் அவனுக்கிணங்கிவிட்டால் நமக்கு அதனால் வரும் பயன் அவமானமாகவே இருக்கும். அவன் நம்மைக் காட்டிவிட்டுத் தான் தப்பவே வழிதேடுவான். அவனுக்கு நம்மை அவமானத்தில் ஆழ்த்தியதுபற்றிக் கவலையிராது. பணம் படைத்தவர்கட்கும் அதிகாரம் படைத்தவர்கட்கும் பிறர் வருத்தமறியும் தன்மையிராது.

பெண்களின் சிருங்காரம்.

இங்கிலாந்து தேசத்துப் பெண்கள் காதில் குண்டல மணிவர்.

பிரான்ஸ்தேசத்து நார்மண்டிப் பெண்கள் சரிகை தொப்பி தரிப்பர்.

ரோமானியா தேசத்துப் பெண்கள் தம் தலை மயிரை நான்காகப் பிரித்து ஜடை போட்டுக்கொள்வர்; பல வர்ணமான சரிகை யுடைகளைத் தரிப்பர்.

ஸ்பெயின் தேசத்துப் பெண்கள் தொப்பிதரிப்பதோடு, கையில் விசிறியும் பிடித்திருப்பர்.

இத்தாலிய தேசத்துப் பெண்களுள் பவளமாலை யணியாதவர்க ளொருவருமில்லை; இம்மாலை திருஷ்டி தோஷத்தைப் போக்குவதாம்.

துருக்கி தேசத்துப் பெண்கள் பலவிதமான நகைகளும், பட்டுச் சராய் குல்லாய் முதலியனவுமணிவர்.

மெயோரி ஜாதிப் பெண்கள் உடம்பு முற்றும் பச்சை குத்திக் கொள்வர்.

ஜப்பான் தேசத்துப் பெண்கள் இடுப்பில் பட்டுக் கச்சையைக் கட்டிக்கொள்வர்.

சையாம் தேசத்துப் பெண்கள் பட்டுக்கச்சையைப் பூணூல் போலத் தரித்துக்கொள்வர்; சராய் போட்டுக்கொள்வர். பலவகையான வர்ண வுடைகளில் இவர்கட்கு மிகு பிரியமாம்.

அரபி தேசத்துப் பெண்கள் பல்லிற்கு நீலச்சாயமும், சைன தேசததுப் பெண்கள் பல்லிற்குக் கறுப்புச்

சாயமும், ஜப்பான் தேசத்துப் பெண்கள் பல்லிற்கு விவாகமாகும் பரியந்தம் மஞ்சட்சாயமும் விவாகமான பிறகு கறுப்புச்சாயமும் போடுவார்.

மலே ஆர்ச்சிபிலகோ தேசத்துப் பெண்கள் தம் பற்களைக் கருவியால் துளைசெய்து, அவற்றில் தங்கச் சுரை, அல்லது வெள்ளிச் சுரைகளைத் தரிப்பர்.

ஆப்பிரிக்காக் கண்டத்துப் பெண்கள் தம் நகங்கட்கு மஞ்சள் சிவப்பு வர்ணங்களைப் பூசுவர்.

பெருஷியா தேசத்துப் பெண்கள் பெரிதாயும் கனமாயுமுள்ள நகையைத் தரிப்பதில் மிகு பிரிய முடையவராக விருக்கின்றனர்.

இந்து தேசத்துப் பெண்கள் பலவிதமான வுடைகளும் அணிகளும் தரித்திருப்பதும், அவர்கள் நகங்களில் சிகப்பு வர்ண முண்டாக, அவற்றில் அழகுநிலைச் சாந்து பூசுவதும் மிகு பிரசித்தமாம்.

நீரும் நெல்லியும்.

குளக்கரைகளில் நெல்லி மரங்கள் இருந்தால் அவற்றின் வேர்கள் ஜலத்தில் இறங்குவதால் ஜலம் இனிமையாகவும் குளிர்ச்சியாகவும் இருக்குமாம். நெல்லிமரத்தடியிலே தோன்றி இரு கரைகளிலும் நெல்லிமரங்களைக் கொண்டிருப்பதால்தான் காவிரி யாற்றின் நீர் குளிர்ந்திருக்கிறதாம். அதில் நீராடுகிறவர்கள் சுகவாசிகளா யிருப்பதற்கும் அதுவே காரணமாம். நீருக்கருகேயுள்ள நெல்லி இனிமை தருவதுபோல, குளங்களிலும் ஏரிகளிலுமுள்ள மீன்கள் அவற்றிலுள்ள அழுக்கைத் தின்று நீரைச் சுத்தப்படுத்துகின்றன. சில ஊரில் கிணறுகளிலே நெல்லிக் கட்டையைப் போட்டுவைப்பதுண்டு.

மரணத்தின் மர்மம்

குலோத்துங்கன் என்றொரு மன்னனிருந்தான். இவன் பாண்டிய ராஜ்யத்திற்கு அரசனாய், அதன் இராஜதானி நகரமாகிய மதுரையிலிருந்து அரசுபுரிந்து வந்தான். மதுரை வைகையென்னும் தெய்வ நதியின் கரைமீது விளங்கும் ஒரு சிவ க்ஷேத்திரம். இதன்கண் மீனாக்ஷி சுந்தரேசுவரர் என்கிற திவ்ய திருநாமத்தோடு சிவபெருமான் திருக்கோயில்கொண்டிருக்கிறார். பாண்டியராஜ்ய பரம்பரையார் இந்த ஆலயத்தைச் செவ்வனே கவனித்துவந்தனர். "கோவில் விளங்கக் குடிவிளங்கும்" என்னும் பழமொழியையும் "ஆலயந்தொழுவது சாலவும் நன்று" என்ற பெரியார் வாக்கையும் அவர்கள் நன்குணர்ந்தவர்கள்; ஆகையினால் தெய்வபக்த சிரோமணிகளாய் விளங்கினார்கள்.

அவ்வாறே குலோத்துங்க பாண்டியனும் சிவபெருமானிடம் பரம பக்திவாய்ந்தவனாய், ஆலயவழிபாடு, ஆலயத் திருப்பணி, அடியார் பூஜை முதலியவைகளிலே ஈடுபட்டிருந்தான். தெய்வபக்தியுடையவனா யிருந்தமையினால் அவனிடம் இரக்கம், அருள் முதலிய நல்ல குணங்களும் சிறந்து விளங்கின. அவன் குடிகளைத் தன் மக்களைப்போல் அன்புபாராட்டி ஆதரித்து வந்தான். பெரியோர்களிடத்தில் பரம விசுவாசமுடையவனாய்

அவர்கள் சொல்லை வேதவாக்காக எண்ணி ஆதரித்து வந்தான். பழிபாவங்களுக்கு அஞ்சும் இயல்புடையவனு யிருந்தமையினுல் அவனிடம் குடிகளும் அன்புவைத்து அவனைத் தங்கள் குலதெய்வமாகப் பாவித்து அவனு டைய சட்ட திட்டங்களை மீருமல் நடந்துவந்தார்கள்.

இந்த மதுரைக்கருகே திருப்புத்தூர் என்று ஓர் ஊருண்டு. குலோத்துங்கன் அரசாட்சிசெய்யுங் காலத் தில் அந்த ஊரிலிருந்து ஓர் அந்தணன் தன் மனைவியுட னும் தன் இளங்குழந்தையுடனும் புறப்பட்டு மதுரைக் குக் கால்நடையாகவந்தான். வருகையில் வழிநடையி லும் வெயிலிலும் களைப்படைந்து அவன் தன் மனைவி யுடனும் மகவுடனும் வழியின்மேலிருந்த ஓர் ஆலமரத் தடியிலே போய் உட்கார்ந்தான்.

அங்குப்போய் உட்கார்ந்த சற்றுநேரத்திற்கெல்லாம் அவன் மனைவி "நாதா, எனக்குத் தாகமாயிருக்கிறது. தீர்த்தம் வேண்டுமே" என்றுகேட்டாள். அந்தணன், இங்குச் சமீபத்தில் நல்ல தீர்த்தம் கிடையாது. கொஞ்ச தூரத்திலேதா னிருக்கிறது. வேண்டுமானுல் நான் போய்க் கொண்டுவருகிறேன். சற்றுநேரம் நீ இவ்விடத் தில் தனித்திருக்கவேண்டும்" என்றுன். மனைவி, "போய் வந்தாலும் நல்லதுதான்!" என்றுள். பிராமணன், தன் கைச்செம்பை எடுத்துக்கொண்டு தண்ணீர் கொண்டு வரப் போய்விட்டான். பிராமணன் அவ்விடம்விட்டுப் போன கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய காற றடித்தது. அந்த ஆலமரத்தில் நெடுநாளைக்கு முன்னே ஒரு வேடுவன் எய்த அம்பொன்று தொற்றிக் கொண்டிருந்தது. அது அந்தக் காற்றில் மோதுண்டு

கீழே விழுந்தது. அது பிராமணனுடைய மனைவியின் வயிற்றுக்கு நேரேவிழுந்து பாய்ந்தது. பாய்ந்ததும் அவள் ஐயோ! ஐயோ!! என்று புரண்டு புரண்டு அலறி உயிர் துறந்தாள்.

அவள் உயிர்துறந்த சற்று நேரத்திற்கெல்லாம் பிராமணன் தண்ணீருடன் வந்து சேர்ந்தான். மனைவி உதிரவெள்ளத்தில் விழுந்து இறந்துகிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு "அந்தோ! இவள் எப்படி இந்தக்கதியை அடைந்தாள். எந்தப்பாவி இவளைக் கொன்றான்? ஆ! என் நாயகியே! என் கண்மணியே! என் கண்ணே! என் உயிரே! உன் உயிர் எப்படிப் போயிற்று? நீ இவ்வாறு இறப்பது உனக்கு முன்பே தெரியுமோ? நான் அருகி லிருந்தால் பார்த்துச் சகிக்கமாட்டேனென்று கருதி என்னை அனுப்பிவிட்டாய்போலிருக்கிறது. உன் புத்தி யேபுத்தி! என் அன்பே! உன்னுடைய இந்தக் குழந் தையை எப்படி மறந்தாய்? பாவி, தாகத்துக்குத் தண் ணீர் கொண்டுவந்துகொடுக்கவும் உதவியற்றவனானேனே! என்று அலறிப் பின், "இப்படித் திடீரென்று மரணம் நேர்ந்ததேன்?" என்று திகைத்துநின்று பார்க்கையில் அவள் வயிற்றில் அம்புபாய்ந்திருந்ததுகண்டு "ஓ யாரோ ஒரு வில்லாளியினால் அடிபட்டு இறந்திருக்கிறாள்" என்று நிச்சயித்து நாற்புறமும் பார்த்தான்.

அங்கு அவ்வேளையில் ஒரு வேடன் தற்செயலாய் வில்லும் கையுமாக வந்துசேர்ந்தான். அவனைக்கண்ட தும் பிராமணன், "ஓ இந்தப் பாவிதான் என் கண்மணி யைக் கொன்றவன். இது நிச்சயம். இவன் இன்னும் என்னைப் பார்க்கவில்லை; பார்த்திருந்தால் இங்கே நிற்க

மாட்டான்" என்று தனக்குள் கூறிக்கொண்டு விரைவாய் அவனைநோக்கிச் சென்று மடக்கிக்கொண்டு, "அடே பாவி! கொலைகாரா! ஏனடா என் மனைவியைக் கொன்றாய்? உனக்கு இந்தக் காட்டில் மிருகங்களகப்படவில்லையா?" என்று கூறி அவனைப் பிடித்துக்கொண்டான்.

இப்பொழுது அவ்வழியே ஒருவன் போனான். அந்தணன் அவனை அழைத்துத் தன்னுடைய நிலைமையைக் கூறி அவனிடம் தன் குழந்தையை ஒப்புவித்து "இக்குழந்தையை மதுரைக்குக் கொண்டுபோய் என் உறவினரிடம் ஒப்புவித்துவிடு. நான் இந்தக் கொலைகாரனை அரசனிடம் அழைத்துக்கொண்டுபோய் விட்டுப் பழிக்குப் பழி வாங்கிவிட்டு வருகிறேன்" என்று சொல்லிப் பசியினால் வருந்தியழும் தன்குழந்தையை எடுத்து முத்தமிட்டு அவன் கையில் கொடுத்தனுப்பினான்; தன் மனைவியைத் தூக்கி முதுகில் போட்டுக்கொண்டு வேடனை மடியைப் பிடித்து "வா, மகாராஜாவிடம் போவோம், இது என்ன கேள்வியில்லாத இராஜ்யமா? பட்டப்பகலிலே ஒரு பிராமணஸ்திரீயைக் கொல்ல உனக்கு வந்த துணிவைப் பார்க்கிறேன்!" என்று கூறி இழுத்தான். வேடன் என்ன செய்வான் பாவம்! என்ன செய்வதென்று தெரியாதவனாய்த் திகைத்துப்போனான்; பின் பலவாறான உறுதிமொழிகள் கூறித் தானல்ல அக்கொலை செய்தது என்று மறுத்தான். பிராமணன் கேட்கவில்லை. வேடன் இது நமது பொல்லாத வேளையென்று எண்ணிக்கொண்டே அந்தணனோடு நடந்தான்.

இவ்வாறு அந்தணன் மதுரைமாநகரத்துக்குள் நுழையவே ஜனங்கள் பெருந்திரளாகக் கூடி வேடிக்கைப்

பார்த்து வியந்தார்கள்; காரணம் யாதென ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டார்கள். "இந்தவேடன் இந்த அந்தணன் மனைவியை வில்லாலடித்துக் கொன்றுவிட்டா னும்! பாவம்! அநியாயக்கொலை! அநியாயக்கொலை"— என்று கூறுவாராயினர்.

பிராமணன் வேடனை விடாமற் பிடித்து இழுத்துக் கொண்டே போய் அரண்மனை வாயிலை யடைந்து, தன் முதுகிலிருந்த பிணத்தை அவ்வாயிலிலே கிடத்தி—

கோமுறை கோடாக் கொற்றவ ரேறே முறையேயோ
தாமரையாள்வாழ் தண்கடிமார்பா முறையேயோ
மாமதி வானோன் வழிவரு மைந்தா முறையேயோ
தீமை செய்தாய்போற் செங்கைகுறைத்தாய் முறையேயோ.

என்று முறையிட்டு அலறினான். அந்தோ! நீதிதவறு மல் காக்கும் பிரதாப சீலனாகிய மன்னவனே! உன்னு டைய ஆளுகையில் இப்படிப்பட்ட பாவச் செய்கை நடக் கலாமா! என்போன்ற பிராமணர்களுக்கும் எழைகட்கும் மகாராஜனே, உன்னைவிட வேறு துணையுண்டோ?'! என்று கூறினான்.

இதைக்கேட்ட காவலாளிகள் அரண்மனைக்குள் ஓடி அரசனை வணங்கி, "மகாராஜாவே, ஒரு வேதியன் தன் மனைவியை ஒரு வேடன் அம்பினாலடித்துக் கொன்றுவிட் டதாக முறையிடுகின்றான்" என்று கூறினார்கள். அரசன் கேட்டதும் மெய்ந்நடுக்கமடைந்து, "இது என்ன விபரீ தம்? என்றைக்கும் நடந்திராத செய்தியைச் சொல்லு கிறான்! சிவ சிவா! சம்போ! மகாதேவா!" என்று கூறி வெளியேவந்து அந்தணனைக்கண்டு, "என்ன செய்தி? நடந்ததென்ன?" என்று கேட்டான்.

பிராமணன், "வேந்தே, நான் என் மனைவியாகிய இவளுடனும் என் கைக்குழந்தையுடனும் இவ் வூருக்கு வந்துகொண்டிருந்தேன். வரும் வழியில் இவளையும் குழந்தையையும் ஓர் ஆலமரத்தடியில் இருக்கச் சொல்லி விட்டு நான் குடிஜலம் கொண்டுவர ஒரு கிணற்றுக்குப் போயிருந்தேன். அப்பொழுது இவ்வேடன் இவளை அம்பினலடித்துக் கொன்றுவிட்டு அங்கே உலாவினன். உடனே நான் வந்து பார்த்து இவ்வனசரனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தேன். என்ன அநியாயமிது? இப் படியுமுண்டா ஒரு கொடுமை?" என்றான்.

அரசன்கேட்டு, "நல்லது, நீர் சும்மாவிரும்" என்று கூறி வேடனைநோக்கி, "என்ன நடந்தது? உண்மை யைச் சொல்லு. ஒன்றையும் ஒளியாதே!" என்றான். வேடன் உடனே அரசன் முன் வெட்டுண்ட மரம்போல் விழுந்து பணிந்து எழுந்து கைகுவித்து நின்று, "ஐயோ நானென்னசெய்வேன்! நான் இந்த வேதியர் ஜலந்திரட் டிக்கொண்டுவந்த அப்பொழுதுதான் அம்மரத்தடிக்கு இளைப்பாறும்பொருட்டு வந்து நின்றேன். இவர் வந்து பிடித்துக்கொண்டார். நான் ஒன்றையும் அறியேன். இது ஸத்தியமான பேச்சு. சொக்கலிங்கக்கடவுள் சாக்ஷி யாய்ச் சொல்லுகிறேன்" என்றான்.

வேந்தன் கேட்டதும் வியப்படைந்து, தன் அருகிலி ருந்த மந்திரிமார்களைப் பார்த்தான். மந்திரிமார்களுள் ஒரு வன் அவ்வேடனைநோக்கி, "நீ இம்மாதைக் கொல்லவில் லையாயின் இம்மாதின்மீது அம்பு பாய்ந்திருக்கக் காரண மென்ன?" என்றுகேட்டான். வேடன், "அது எதனு லோ நான் அறியேன்" என்றான். உடனே இன்னொரு

மந்திரி, "மகாராஜாவே! இவன் எப்படி உண்மைசொல் வான்! கொன்றவன் நான் கொன்றேன் என்று சொல்லித் தன் குற்றத்தை எளிதில் ஒப்புக்கொள்வானு? ஒருகாலும் ஒப்புக்கொள்ளான். ஆதலினுல் இவனைத் தக்கபடி தண் டித்தே தீரவேண்டும்'' என்ருன்.

அரசன் உடனே, "அப்படியாயின், இவனைத் தண்டி த்து உண்மையைக் கண்டுபிடியுங்கள்'' என்று கூறிவிட்டு அரண்மனைக்குள் போய்விட்டான். மந்திரிகள் பிறகு அவ்வேடனைப் பலவாருன தண்டனைகளுக்குள்ளாக்கி விசாரித்தார்கள். அவன், "நான் ஒன்றையுமறியேன்! இம்மாது இறந்தது யாராலோ?'' என்று கூறுவதையல்லா மல் வேருென்றும் கூறவில்லை. மந்திரிகள் என்னசெய் வார்கள்; அரசனிடம் போய், "வேடனைப் பலவிதமாகத் தண்டித்துப் பார்த்தோம். அவன் தான் ஒன்றையும் அறியேன்'' என்கிருன். என்னசெய்வது? வேறு யாரே னும் ஏன் கொன்றிருக்கப்படாது. யாரேனும் வேட்டை யாடவந்து எய்த அம்பு தவறுதலாய்ப்பட்டு இம் மாதுக்கு மரணநேர்ந்திருக்கலாமல்லவா?'' என்று கேட் டார்கள். வேந்தன், "அப்படியுமிருக்கலாம்!'' என்று கூறிச் சற்றுநேரம்வரையில் ஆலோசித்தபடியிருந்து, பக் கத்திலிருந்த பெரியோர்களைப் பார்த்து "இதனை எப்ப டிக் கண்டுபிடிப்பது?'' என்று கேட்டான்.

அவர்கள், நெடுநேரம் ஆலோசனையிலிருந்து, "பிரபு வே, ஒன்றுந் தோன்றவில்லை. ஜகதீசனுகிய மீனுக்ஷி சுந்தரேசுரருடைய திருவருளினுலேதான் இதனைத் தெரியவேண்டும். வேறுபாயம் ஒன்றுந் தோன்றவில்லை'' என்றனர்.

அரசன் "அப்படியா!" என்று கூறிப் பிராமணனை வரவழைத்து, நீர்போய் உமது மனைவியின் ஈமக்கடனை நிறைவேற்றும், கவலைப்படாதேயும், நாம் நாளையதினம் விசாரித்துத் தீர்ப்புச் செய்கிறோம்" என்று கட்டளையிட்டனுப்பிவிட்டு வேடனைச் சிறைச்சாலைக்கு அனுப்பினான்; தன் மந்திரிமார்களைப்பார்த்துப் "போய்வாருங்கள். பிறகு பேசிக்கொள்வோம்" என்று கூறி உடனே வேறொன்றினும் சிந்தைசெலுத்தாமல் மீனாக்ஷி சுந்தரேசுவரருடைய ஆலயம் சென்று அதனை வலம்வந்து பணிந்து "எம்பெருமானே, எமதண்ணலே, சிவபெருமானே, கருணாநிதியே! இந்த வேடுவனே பிராமணமாதைக் கொன்றான்? அல்லது வேறு யாராவதா? ஒன்றும் நிச்சயிக்கக் கூடவில்லை. ஆதலின் சர்வக்ஞராகிய தாம் இந்த உண்மையை எனக்குணர்த்தி ஏழையின் மனக்கவலையை நீக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

"பக்தனே, இந்த மதுரையில் வணிகர் வீதியில் ஒரு கல்யாணம் நாளையதினம் நடக்கப்போகிறது. அந்தக் கல்யாணத்திற்கு நீ அந்த அந்தணனுடன் மாறுவேஷம் பூண்டு வந்திரு. அப்பொழுது இந்தக் கொலையினுண்மை விளங்கும்" என்று அசரீரிவாக்குண்டாயது.

இதைக் கேட்டதும் வேந்தன், மனமகிழ்ந்து இறைவனைப் பணிந்து கோவிலை வலம்போந்து அங்கிருந்து புறப்பட்டு அரண்மனைவந்தான். மறுநாள் கல்யாண வீட்டை விசாரித்துத் தெரிந்துகொண்டு அந்தணனுடன் வேந்தன் அங்கே சென்று வணிகரோடு வணிகராயுட்கார்ந்திருந்தான்.

இவ்வாறு இவர்கள் வீற்றிருக்கையில், அங்கே ஒரு பக்கத்திலிருந்த ஒருவன் இன்னொருவனைப் பார்த்து, "தோழனே, இந்த மணமகனுடைய ஆயுள் இன்றோடு முடிகிறது. இவனைக்கொண்டுவாருங்கள்" என்று யம தருமராஜா நமக்கு ஆணை தந்திருக்கிறாரே! நாமெப்படி இவனுடைய ஆவியைக் கவர்கிறது. இவனுக்கு ஒரு வித நோயுமில்லையே! காரணமின்றி உயிரைக் கொள்வ தெப்படி?" என்றான். இன்னொருவன், "நண்ப! இது ஒரு கேள்வியா? ஆலமரத்தில் நெடுநாட்களுக்கு முன்னே தொற்றிக்கொண்ட ஓர் அம்பை வீழ்த்தி நாம் அன்று அந்தணனுடைய மனைவியின் உயிரைக் கவரவில்லையா? அப்படி இதற்கும் ஓர் உபாயந்தேடினாற் போகிறது" என்றான். அவன், "ஆம் நினைவிற்குவருகிறது. இருக் கட்டும்; இன்று என்ன உபாயந் தேடலாம், நீயே சொல்" என்றான். மற்றவன், இந்தக் கல்யாணக் கொட்டுமுழக்கில் இங்கு புறக்கடையில் கட்டியிருக்கும் பசு மருண்டு கட்டுக் கயிற்றை அறுத்துக்கொண்டு வந்து மணமகன்மீது பாயும்படி செய்து இவனுயிரைக் கவர்வோம்" என்றான். அவன், "நல்லது! அப்படியே செய்வோம்" என்று மறுமொழி பகர்ந்தான்.

இந்தச் சம்பாஷணை பிராமணனுக்கும் வேந்தனுக் குமே கேட்டது. மற்றவர்களுக்குக் கேட்கவில்லை. எப் படிக்கேட்கும்? யமதூதர்களுடைய சம்பாஷணையல்லவா? இவர்களுக்குச் சிவபெருமான் திருவருளால் கேட்டது. ஆகவே இவர்கள், உண்மையுணர்ந்து ஒருவரையொருவர் பார்த்து வியப்படைந்தார்கள். வேந்தன், மெதுவாய், 'அந்தணரே, கேட்டீரோ உமது மனைவி இறந்ததன்

வழியை?" என்று கேட்டான். அவன் "கேட்டேன்; ஆயினும் இந்தத்தூதர்கள் சொல்லுகிறபடி இம்மணமகன் இப்பொழுது இறப்பானாயின் என்மனைவி யிறந்ததற்கு இவர்கள் கூறிய காரணமும் உண்மையென நம்புவேன்" என்றான். அரசன், "இரும், கவனிப்போம்" என இருவரும் மௌனமாயிருந்தனர்.

கல்யாணச்சடங்கு நடந்துகொண்டிருக்கிறது. வாத்தியம் தடபுடலாய் முழங்குகிறது. தூதர்கள் கூறியபடி புறக்கடையில் கட்டியிருந்த பசு தாம்பை அறுத்துக் கொண்டு ஓடிவந்து பலபேர் தடுத்தும் அடங்காமல் மணமகன்மேல் பாய்ந்தது. பாயவே அவன் அந்த மணமேடை மீதே சற்று நேரத்திற்கெல்லாம் பிணமானான்.

"மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி யாய்க்
கழிய"

அந்தணன் கண்டதும் அரசனைப்பார்த்து, "வேந்தே! என் மனைவி இறந்த துயரம் போய் இத்துயரம் அதனினும் பெரிதாய் மூண்டது. அந்தோ! தெய்வமே?" என்று கூறிக் கண்ணீர்விட்டு அழுதான். வேந்தனும் அங்கிருக்க மனம் சகியாமல் அந்தணனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தான்.

பிறகு மறுநாள் சபை கூட்டி எல்லோருடைய முன்னிலையிலும் கல்யாண வீட்டில் நடந்த மரணம் இப்படிச் சம்பவித்ததென்பதையும் அந்தணன் மனைவி இறந்ததற்குக் காரணத்தையும் கூறி "மரணத்தின் மர்மம் இப்படியிருக்கிறது. உலகத்தில் இதனை யறிந்து கொள்ளும் திறமையில்லாத நாம் பல வழிகளை நினைந்து இடர்ப்படுகிறோம். சர்வலோக சரண்யனாகிய சிவபெருமானுடைய திருவருளால் இந்த உண்மை நமக்கு விளங்கியது" என்று

கூறி மகிழ்ந்து பரமபதியாகிய பார்வதி நாதனை வணங்கித் தியானித்து, அந்தணனை அழைத்து, "நீர் வேறு விவாகம் செய்துகொண்டு சுகமாயிரும்" என்று சொல்லி அவனுக்குப் போதுமான பொருள் கொடுத்தனுப்பினன்; உடனே வேடனையும் சிறையிலிருந்து விடுவித்துத் தன் முன் வரவழைத்து அவனைநோக்கி, "அப்பனே! நீ உண்மையையே உரைத்தாய். அறியாமையினல் நான் உன்னைத் தண்டித்தேன். மன்னிப்பாய்! இந்தா உனக்கு வேண்டிய பொருள்கள் தருகிறேன். நீ எடுத்துக்கொண்டுபோய்ச் சுகமாயிரு" என்று கூறி அவனுக்கு அவன் விரும்பிய பொருள்கொடுத்து அனுப்பினன்.

வேடன் பரம ஏழையானதால் பொருளை யடைந்ததும், 'ஆ நான் புண்யவானே; என்னவென்று சொல்வேன்' 'கொடுக்கிற தெய்வம் கூரையைக் கிழித்துக் கொட்டும்' என்கிருர்களே அது சரியாயிருக்கிறது. எங்கேயோ கிடந்த என்னைக் கொண்டுவந்து இப்படித் தண்டனையடையும்படி செய்வித்துப் பொருளைக்கொடுத்த என் தெய்வத்தின் பெருமையை என்னவென்று சொல்வது?" என்றெண்ணிச் சந்தோஷமடைந்து தன் வீடுபோய்ச் சேர்ந்து சுகமாயிருந்தான்.

குழந்தைகளே! சாட்சிகளில்லாத இவ்வழக்கின் உண்மையை நம்முடைய தேசத்து முன்காலத்து அரசர்கள் எப்படிக் கண்டுபிடித்தார்கள் பார்த்தீர்களா? அவர்களெல்லோரும் தெய்வத்தை நம்பி தெய்வபக்த சிரோமணிகளாய் விளங்கினர்கள். ஆகையினல் அவர்களுக்குத் தெய்வம் உண்மையை இவ்வாறு எந்தச் சமயத்திலும் விளக்கி வந்தது. அதனல் அவர்கள் நிரபராதியைத் தண்டித்துக் கொடிய பாபத்திற்காளாகாமல் தப்பினர்கள். தெய்வ பலமிருந்தால் நாம் எதையும் அறியலாம்; எதையும் வெல்லலாம். எதிலும் நமக்குக் குறைவேற்படாது. ஆகையினல் தெய்வத்தை நம்பி அதனை வழிபடுவதே அறிவுடைமையாகும். இதன லல்லவா—"கடவுளை நம்பினேர் கைவிடப்படார்" என்று பழமொழியும் வழங்குகிறது.

சமயோசிதமானயுக்தி.

ஒருநாள் ஓர் அரசன் தன்னுடைய பிரதான மந்திரியைப்பார்த்து "சண்டையில் முக்கியமாய் எதை உபயோகப்படுத்தவேண்டும்?" என்றுகேட்டான்.

மந்திரி, "சமயோசிதமான யுக்தியையும் புத்தி சாதுர்யத்தையுமே உபயோகப்படுத்தவேண்டும்" என்றான்.

அரசன்; மந்திரியின்மேல் கோபங்கொண்டு "நீ என்ன முட்டாள்தனமாய்ப் பதில் சொல்லுகிறாய்? ஆயுதங்களுக்கு முன்னால் சமயோசிதமான யுக்தி என்னசெய்ய வல்லது?' என்றான். மந்திரி "சமயம் நேர்ந்தபோது காட்டுகிறேன்" என்றான்.

சிலநாள் சென்றபிறகு ஒருநாள் அரசனும் மந்திரியும் நகரசோதனைக்குச் செல்லுகையில் ஒருமதங்கொண்ட யானை பாகனை மீறி இவர்களுக்கெதிரில் ஒரே ஓட்டமாய் ஓடிச் சமீபத்தில் வந்துவிட்டது. அரசனின் உரைவாளில் கத்தியிருந்தபோதிலும் அரசன் திடுக்கிட்டவனாய் ஒன்றும் தோன்றாமல் திகைத்தான். பக்கத்திலிருந்த மந்திரியிடமோ கத்தியும் இல்லை வேறுவிதமான ஆயுதமும் இல்லை. இருந்தாலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அங்கே சமீபத்தில் இறந்துகிடந்த ஒருநாயைத் தூக்கிச் சுழற்றி யானையின் நெற்றியில் விழும்படி எறிந்தான். யானை திடுக்கிட்டுப்பயந்து வந்தவழியே திரும்பி ஓடிவிட்டது. உடனே அரசன் மந்திரியைப்பார்த்து "நீ சொன்னது சரியாய்விட்டது. ஆயுதமிருந்தும் சமயோ

சிதமான யுக்தியில்லாவிடில் பிரயோசனமில்லை" என்று மந்திரியைப் புகழ்ந்தான்.

ii

ஓர் ஊரில் ஒரு தீபாவளியன்று சுமார் பன்னிரண்டு வயதுள்ள ஒரு பெண் புதுச்சிற்ருடை உடுத்துக்கொண்டு பட்டாசு சுட்டுக்கொண்டிருந்தாள். அப்போது ஒருபொறி காற்றில் பறந்து அவளுடைய சிற்ருடையில் விழுந்து கனிந்து தீப்பற்றிக்கொண்டது. ஆடை நன்ருய்ப்பற்றி எரியும் வரையில் குழந்தைக்குத் தெரியவில்லை. அவ்வழியே போய்க்கொண்டிருந்த ஒருஸ்திரீபார்த்து ஐயோ, சிற்ருடையில் நெருப்பு, சிற்ருடையில் நெருப்பு, என்று கத்தினுள். கத்தினுளேயொழிய அதை அவிக்க ஒருமுயற்சியும் செய்யவில்லை. இங்கு இன்னும் இரண்டுபேர் சப்தம் கேட்டு ஓடிவந்தார்கள்; அவர்களும் கூடிக் கத்துகிறுர்களேயொழிய நெருப்பை அவிக்கவில்லை. இதற்குள் குழந்தை ஐயோ, ஐயோ, என்று கத்திக்கொண்டு குதிக்கிறது. அதற்கும் இன்னதுசெய்வதென்று புலப்படவில்லை. தேகத்தில் சில இடங்களில் சுட்டுவிட்டது. குழந்தை தவிக்கிறது. குழந்தைக்குத்தாய் சங்கதி கேள்விப்பட்டு ஓடோடியும் வந்துபார்த்தாள். சிற்ருடை எரிகிறது. குழந்தை தவிக்கிறது. பக்கத்திலுள்ளவர்கள் கத்திக்கொண்டிருக்கிறுர்கள்.

குழந்தை தாயாரைக்கண்டதும் "அம்மா, அம்மா என்று கதறிக்கொண்டு அவளைத் தாவிக் கட்டிக்கொள்ளச் சென்றது. தாயார் மனேதிடத்துடன், கலவரப்படாமல் குழந்தயை அப்படியே நிற்கும்படி சொல்லிக் கொண்டே பக்கத்தில் தெருவில் கிடந்தமணலை இரண்டு

கரங்களாலும் அள்ளி அள்ளி நெருப்பு எரியும் இடத்தில் போட்டாள், நெருப்பும் அவிந்தது, குழந்தையும் தப்பியது. தாயார் சந்தோஷத்துடன் குழந்தையைக்கட்டிக் கொண்டு அம்மா பயப்படாதே, அழாதே காயத்தை ஆற்றிவிடலாம். சிற்றாடைபோனால் போகிறது. அப்பாவிடஞ்சொல்லி இப்போதே புதுச்சிற்றாடை வாங்கித்தரச் சொல்லுகிறேன்'' என்று குழந்தையைத்தேற்றி அழைத்துக்கொண்டுபோனாள்.

குழந்தைகளே! இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் புத்தியில்லாத சில தாய்மார்கள் குழந்தைகளை அடிக்கிறதுண்டு. இது மிகவும் பிசகு. முன்பே திகிலடைந்திருக்கும் குழந்தையை அடித்தால் அது இன்னும் அதிகமாய்த் திகிலடைந்து சில சமயங்களில் காயலாவில் விழுவதுமுண்டு. எப்போதும் நிதானம் வேண்டும்.

எவன் மனோதைரியம் வாய்ந்தவன்? மெய்பேசுகிறவனே.
எவன் மனோதைரியமில்லாதவன்? பொய்பேசுகிறவனே.

பொய்பேசினால் நாம் துன்பத்திலிருந்து தப்பலாமென்று எண்ணி மெய் பேசுவதற்கஞ்சிப் பொய்பேசுகிறான். அதனால் பொய்யன் மனோதைரியமில்லாதவனே.

மெய்பேசுவோம் இதனால் வந்ததுவரட்டும், வரும்துன்பங்களைப் பொருத்திருப்போம்—என்று மெய்பேசுகிறவன் மெய்பேசுகிறானதலால் மெய்பேசுகிறவன் மனோதைரியம் வாய்ந்தவனாகிறான்.

மூடர்கள் நல்லது பொல்லாதது தெரியாமலும் சமயா சமயந் தெரியாமலும் ஏதாவது பேசுவார்கள்; ஏதாவதொன்றைச் செய்வார்கள். அவர்களோடு சேர்ந்திருந்தால் துன்பமும் அவமானமும் நேரிடும் ஆகையினால், அவர்களைவிட்டு விலகியிருக்கப் பார்ப்பதே நல்ல புத்திமானுக்கு அழகாம். அற்ப சிநேகம் பிராண சங்கடம்.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS

காப்பக நூலகம்

AYURVEDIC
EYE TREATMENT
OF
Mr. T. S. AMIRTHALINGAM PILLAI
OF TANJORE NOW IN MADRAS.

கண் வைத்தியம்

எமது நண்பர்களில் பலர் எமது வைத்தியசாலையில் கண்வைத்தியமும் நடத்தினால் அநுகூலமாயிருக்குமென்று கேட்டுக்கொண்டதின் பேரில், ஆயுர்வேத கண் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தவரும், தஞ்சாவூர் சமஸ்தான அரண்மனை கண்வைத்தியரும், மெடல் பெற்றவரும், கண் வைத்தியத்தில் ஸ்பெஷலிஸ்டுமாகிய Mr. T. S. அமிர்தலிங்கம் பிள்ளையை வரவழைத்திருக்கிறோம். கண்ணிலுண்டாகும் காட்டராக்ட் (Cataract) கண்மணாய், அமரம், பில்லம், அன்னகோபம் முதலிய சாஸ்திர சம்பந்தமான வியாதிகளையும், அடிபட்ட கண்கள், குந்தம் தள்ளிய கண்கள், பூவிழுந்த கண்கள் இன்னும் அநேகவிதமான கண் வியாதிகளையும், எரிச்சல், உறுத்தல் முதலிய கொடுமையில்லாத உயர்ந்த ஔஷதங்களைக் கொண்டு, ஆப்பரேஷன் இல்லாமல் சௌக்கியப்படுத்தப்படும். எழைசளுக்கு இலவசமாய் வைத்தியம் செய்யப்படும்.

நோயாளிகளை காலை 7-மணி முதல் 9-மணி வரையிலும் மாலை 4-மணி முதல் 6-மணி வரையிலும் கவனிக்கப்படும்.

டாக்டர் வி. ஆர். சுந்தரம்,
“ஆயுர்வேத வைத்திய மந்திரம்”
பைகிராப்ட்ஸ் ரோட்,
இராயப்பேட்டை, சென்னை

சில அருமையான புத்தகங்கள்

பாலவிநோதினி ஆசிரியர்

வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதியவர்கள்

இயற்றியவை.

இராமாயண இரகசியம் :—சித்திரப்படங்களுடன் கூடியது	0	10
(பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம்) ...	0	8
ஜடாவல்லவர் :—பெரிய புதிய பதிப்பு ...	2	8
விஜயபாஸ்கரன் :—அல்லது ஒரு குற்றத்திற்கு ஒன்பது குற்றம்	2	0
ஔவை அருந்தமிழ் :—வெகு அருமையான நூல்—தமிழ்மக்கள் ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்க வேண்டியது.	0	12
கஜேந்திரமோக்ஷர், கண்ணப்பன் :—பக்திப்பிரபாவம் ததும்பியுள்ளது	0	4
அநந்தராமாயண வசனம்	5	0
தத்துவசங்கிரஹ ராமாயண வசனம் ...	3	8
பாண்டவர்களின் பாலலீலை	0	10
பாண்டவர் வனவாசம்	0	12
வள்ளிநாயகி ஒரு சிறந்த நாடகம்	0	12
சுந்தரகாண்டம் ஷை	0	12

புதிதாய் வெளிவந்துள்ள இனிய நாவல்கள்.

இரத்னபுரி ரகசியம் 2 பாகமும்	4	0
கஜபதி துப்பறியும் நாவல் ...	0	10
திகம்பரசாமியார் 2-பாகமும்	3	0
ஷண்முகசுந்தரம் ...	2	0
விக்ரமசிங்கன் கோட்டை ...	1	0
மதனகல்யாணி 1, 2, 3 பாகம்	4	8
அருச்சுன சந்நியாசி	0	12
தனபாக்யம் ...	2	0
வசீகரி ...	1	12
வஸுமதி ...	1	8
தாமரைவதனி ...	1	4
கிருஷ்ணகுமாரி ...	0	12

சுப்ரமண்யர் தோத்திரக்கொத்து ... 0 4

விலாசம் :—மானேஜர், பாலவிநோதினி ஆபீசு,

இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.